1969 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்தையொட்டி இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்குத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

4. அவையுரிமைக் கேள்வி

'நவசக்தி' நாளிதழ் மீது எழுப்பப்பட்ட அவையுரிமைக் கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நவசக்தி பத்திரிகையின் 22—3—1969-ம் நாளிதழில், இப் பேரவையின் நிகழ்ச்சிகளைத் திரித்து வெளியிட்டிருப்பதாக உரிமைப் பிரச்னை ஒன்றை திரு. மு. சின்னசாமி அவர்கள் 24—3—1969 அன்று பேரவையில் கொண்டு வந்தார்கள். அந்தப் பத்திரிகை ஒரு திருத்தம் வெளியிட்டிருந்ததேயொழிய, அதற்கு வருத்தம் தெரிவித்து எழுதவில்லை. அப்படி வருத்தம் தெரிவித்து எழுதும் என்று எதிர்பார்த்து இதைப் பின்னர் எடுத்துக்கொள்கிறேன் என்று பேரவைக்கு 25—3—1969 அன்று அறிவித்தேன்.

அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் தவறுக்கான வருத்தத்தை 26—3—1969 நாளிதழில் வெளியிட்டு விட்டதால் மேற்கொண்டு அப்பத்திரிகையின் மீது நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று அறிவிக்கிறேன்.

5. கூடுதல் வினாக்களுக்கு விடையளித்தல்

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, நீங்கள் விதிமுறைகளைப் பற்றியும், நடைமுறையைப் பற்றியும், மரபுகளைப் பற்றியும் சொன்னீர்கள். அதை நான் வரவேற்கிறேன். விதிமுறைகளின் அடிப்படையில் பார்க்கும்போது சென்ற பெப்ரவரி மாதத்திலிருந்து என் கேள்விகள் ஒன்றும் இங்கு வரவேமாட்டேன் என்கிறது. 1,500 கேள்விகள் கொடுத்திருக்கிறேன். டிப்பார்ட்மென்டிலிருந்து எனக்கு வந்திருக்கிற அதிகாரபூர்வமான லெட்டர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைகள்கூட அதுதான். இவ்வளவு கேள்விகள் கொடுத்திருக்கிறேன், இவ்வளவுதான் வந்திருக்கின்றன என்பதுபற்றி கேட்பதுகூட இந்த அவையில் கேட்கக் கூடாது. அதைக் கூட என் அறையில்தான் கேட்க வேண்டும். 1,500 கேள்விகள் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் கொடுத்ததில் 85 கேள்விகள்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பேரவை கலைக்கப்பட்டு, காலாவதியாகி பின்னர் உயிரூட்டியிருப்பவை 83 கேள்விகள். புதிதாக 19 கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆக 102 கேள்விகள்தான் திரு. கோதண்டராமன் அவர்கள் பேரில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. நட்சத்திரக் குறியிடாத கேள்விகள் 13 அனுமதிக்கப்பட்டிருக்

கின்றன. டிப்பார்ட்மென்ட்டுக்கு மூன்று அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்தக் கேள்விகளுக்கு விடைகள் வந்த பிறகுதான் பேரவைக்கு அனுப்ப முடியும். இப்போது கூட நான் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் கூறியிருக்கிறேன். விடைகள் இலாகாக்களிலிருந்து விரைவில் வருவதில்லை, ஆகவே, அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறேன். எந்தவிதமான காலதாமதமும் இங்கு நடைபெறவில்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவோ கேள்விகளை எழுதி அனுப்பிவிடுகிறோம், ஆனல் அந்தக் கேள்விகள் எல்லாம் அனுமதிக்கப்பட்டு விட்டன என்று கருதத் தேவையில்லை. எந்தெந்தக் கேள்விகள் எந்தெந்தக் காரணங்களுக்காக அனுமதிக்கப் படவில்லை என்பதும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கபபடுகிறது. மேலும், அதைப்பற்றிக் கேட்பதாகயிருந்தாலும்கூட அவையில் அதைப் பற்றிக் கேட்பது சரியல்ல. அப்படி ஒவ்வொருவரும் கேட்பதாகயிருந்தால் அவையில் ஒன்றையும் செயல்படுத்த முடியாத நிலை ஏற்படும். ஆகவே அறையில் வந்து கேட்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அறையில் ஒருமுறை அல்ல, இரண்டு முறையல்ல, பல முறை நான் கேட்டாகிவிட்டது. அப்படிப் பலமுறை கேட்டும் கூட எங்களுக்கு மட்டும், குறிப்பாக மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் மறுக்கக் கூடிய அளவிற்கு இருக்கிறது என்பது என் எண்ணம். தொடர்ந்து இந்தச் சட்டசபை ஆரம்பித்ததற்குப் பிறகுகூட காங்கிரஸ் கட்சியின் கேள்விகள் மட்டும் வருகின்றனவே தவிர நாங்கள் கேள்விகள் போடுவதற்கு அனுமதிப்பதில்லை. கேள்விகள் வரமாட்டேன் என்கிறது. முக்கியமான பிரச்னைகள், ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் என்று எது போட்டாலும் அவை வரக்கூடிய அளவிற்கு கிடையாது. விதிமுறைகள், நடைமுறைகள் இவைகளைப்பற்றியெல்லாம் சொன்னல் மட்டும் போதாது. 1,500 கேள்விகள் அனுப்பியதில் இப்போது 122 தான் இருக்கிறது. இலாகாக்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம், அவை வந்தால் தான் எடுத்துக்கொள்ளமுடியும் என்று சொல்லக் கூடிய அளவிற்கு இருந்தால் இது வேதனைப்படக் கூடிய விஷயமாகும். எதற்காக வேண்டி நாங்கள் கேள்விகள் எழுதி அனுப்புவது. விதிமுறை களின் அடிப்படையில்தான் நான் இதைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைகள்படி எப்படி நடக்க வேண்டுமென்று சொல்லியாகிவிட்டது. அதை வந்து சொல்லவேண்டிய இடம் இந்த பேரவை அல்ல. உங்கள் கேள்விகள் எவ்வளவு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன். அந்தக் கணக்கைப்பற்றிச் சொன்னேன். முதல் அமைச்சர் அவர் களிடமும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இலாகாக்களிலிருந்து விரைவில் விடைகள் வரவில்லை. ஆகவே, அதற்கான நடவடிக்கை களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இப்போதுதான் அறையில் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். விரைவில் விடைகளை அளிக்க

வேண்டும், எவ்வளவு விரைவில் அறிக்கைகளை அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவில் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வந்திருக்கிறேன். திரு. கோதண்டராமன் அவர்களின் கேள்விகள் எவ்வளவு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினேன். தனக்கு ஒருவருக்கு வரவில்லை என்பதால் கம்யூனிஸ்ட் கட்சிக்கே வரவில்லை என்ற முறையில் சொன்னார்கள். திரு. கோதண்டராமனின் எண்ணம் தன்னைத் தவிர வேறு யாரும் கேள்விகளை இந்த அவையில் போடக்கூடாது என்பது. திரு. கோதண்டராமன் நிறையக் கேள்விகள் கேட்பவர். 236 பேர்களுக்கு கேள்விகள் கேட்க இடம் இருக்கிறது. அதற்கு வாய்ப்பளிக்கவேண்டும். இருக்கிற நோக்கில் ஒவ்வொரு பார்டியையும் பார்த்துப் பார்த்து தான் கொடுத்து வருகிறேன். தி.மு.க., காங்கிரஸ், சுதந்திரா, பி.எஸ்.பி., எஸ்.எஸ்.பி., கம்யூனிஸ்ட் கட்சி இடது, வலது, தனிப்பட்டவர்கள் என்று எல்லோரையும் பார்த்துப் பார்த்துத் தான் மாறி, மாறி கொடுத்து வருகிறேன். அதைப் பார்த்தால் தெரியும். எனக்கு இந்தக் கட்சி அந்தக் கட்சி என்ற மனப்பான்மை இல்லை. எனக்கு ஒரு வேற்றுமையும் கிடையாது. அந்த முறையில் தான் நான் அனுமதி கொடுத்து வருகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயின்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். "கோதண்டராமனின் எண்ணம் தனக்கு மட்டும் வரவேண்டும்" என்று சொல்வது பற்றி ரொம்ப வருத்தப் படுகிறேன். நான் அதுமாதிரி சொல்லவில்லை. சபாநாயகர் அவர்களின் எண்ணம் தி.மு.க.-விற்கு மட்டும்தான், சுதந்திரா விற்கு மட்டும்தான், காங்கிரஸுக்கு மாத்திரம்தான் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது என்று நானும் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமனை நான் குறை சொல்ல இதைச் சொல்லவில்லை. திரு. கோதண்டராமனுக்கு அவ்வளவு ஆர்வம் இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். அதைத்தான் சொல்கிறேன். கேள்விகள் கேட்கவேண்டு மென்ற துடிப்பு தப்பு என்று சொல்லவில்லை. அதுபோன்ற துடிப்பு எல்லோருக்கும் இருக்கிறது. அதை மதிக்கவேண்டும் என்றுதான் சொல்கிறேன். நான் குறை சொல்லவில்லை. எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கவேண்டியிருக்கிறது.

6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. சி. கோவிந்தராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் இந்தியாவிலுள்ள ஏனைய மின்சார வாரியங்களை விட சிறப்புற்று விளங்குகிறது என்று எல்லோராலும் போற்றப்படுகிறது. அது உண்மை. அத்துடன் திருப்திப்பட்டால் போகாது. அப்படி திருப்திப்பட்டு விட்டால் மின்சார வாரியத்திற்கு நாம் உதவி செய்தவர்களாக ஆக மாட்டோம். மின் சாரவாரியத்தின் பொருளாதார நிலையை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் மூலதனம் 314 கோடி ரூபாய். இந்த 314 கோடி